<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 153/2022 | சாட்சியம் | : | **WW1** |
| **Name** | : | திரு.லோகநாதன் | | | |
| **Date** | : | **06.03.2025** | | | |
| **Time** | : | **10.47 a.m to 11.05 a.m** | | | |

<u>தொ.த.சா.**1.**திரு.லோகநாதன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

நான் எதிர்மனுதாரர் கல்வி நிறுவனத்தில் 2013 ஆம் ஆண்டிலிருந்து வேலை பார்த்து வருகிறேன். அலுவலக அட்டெண்டராக வேலை பார்த்தேன். என்னுடைய சம்பளத்தில் ESI, PF பிடித்தம் செய்யப்படவில்லை. 2011 ஆம் வருடத்திற்கு முன்னர் வேலைக்கு சேர்ந்த நபர்களுக்கு மட்டுமே ESI, PF பிடித்தம் செய்யப்பட்டது அதன் பின்னிட்டு வேலைக்கு சேர்ந்தவர்களுக்கு பிடித்தம் செய்யப்படவில்லை. சமரச அலுவலர் முன் நான் விசாரணைக்கு சென்றேன் அப்போது சமரச அதிகாரி நிர்வாகம் மீண்டும் வேலை தர தயாராக இருப்பதாகவும் வேலைக்கு சென்று சேர வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் நிர்வாக தரப்பில் மீண்டும் வேலைக்கு வந்து சேர அறிவுறுத்தி ஒரு குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது என்றால் இல்லை. அதன் பிறகும் நான் வேலைக்கு செல்லவில்லை என்றால் நான் வேலைக்கு

போனேன் ஆனால் அவர்கள் 3 மணி நேரம் காத்திருக்க வைத்துவிட்டு பின்னர் தகவல் தெரிவிப்பதாக சொல்லி மேலாளர் என்னை அனுப்பி விட்டார் அதன் பிறகு தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை. நான் வேலைக்கு சென்ற பிறகும் அவர்கள் வேலை வழங்கவில்லை என தெரிவித்து நீதிமன்றத்திற்கோ நிர்வாகத்திற்கோ எழுத்து மூலமாக கடிதம் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் தற்பொழுது கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு வழங்கப்பட்ட பணி நீக்க உத்தரவினை நான் சமரச அதிகாரி முன்பு தாக்கல் செய்திருக்கிறேன் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். நான் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் அலுவலக உதவியாளராக வேலை செய்த காலகட்டத்தில் அங்கு இருக்கும் அதிகாரிகள் சொல்லும் கோப்புகளை ஒரு இடத்தில் இருந்து வேறொரு இடத்திற்கு கொண்டு கொடுக்கும் வேலை செய்து வந்தேன் என்றால் ஆமாம். நான் வேலையில் இருந்து நின்ற தேதியில் இருந்து இன்றைய தேதி வரை கூலி வேலைதான் செய்து வருகிறேன் என்றால் ஆமாம். நான் வேறு எந்தவித நிர்வாகத்திலும் வேலை செய்யவில்லை. என்னுடைய வேலை நீக்கத்திற்கு பிறகு நான் நிர்வாகத்திற்கு எதிராக வேலை நிறுத்த போராட்டம் எதுவும் மேற்கொள்ளவில்லை. நிர்வாகம் எனக்கு இன்றைய தேதியில் வேலை கொடுக்க தயாராக இருந்தால் வேலையில் சேர தயாராக இருக்கிறேனா என்றால் என்னுடன் வேலைக்கு சேர்ந்தவர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறது அதே சம்பளம் கொடுக்கப்படும் பட்சத்தில் சேர

தயாராக உள்ளேன். நான் கேட்டிருக்கும் பின் சம்பள பரிகாரம் எனக்கு கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தற்சமயம் வேறொரு கல்லூரியில் வேலை பார்த்து மாத சம்பளம் வாங்கி வருகிறேன் என்றால் இல்லை.

மறு விசாரணை இல்லை.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.03.08 10:46:12 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:06.03.2025.